| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 56 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 56 ] [ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T** **ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ**

**Code No. : 85-T** **Subject : SOCIAL SCIENCE**

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

ದಿನಾಂಕ : 16. 04. 2012 ] [ Date : 16. 04. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | × | |
| 6. | | 19. | | 32. | | 45. | | × | |
| 7. | | 20. | | 33. | | 46. | | × | |
| 8. | | 21. | | 34. | | 47. | | × | |
| 9. | | 22. | | 35. | | 48. | | × | |
| 10. | | 23. | | 36. | | 49. | | × | |
| 11. | | 24. | | 37. | | 50. | | × | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ | |
| 2. ✓ | | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை ( Subjective type ) வினாக்கள் என மொத்தம் 56 வினாக்கள் உள்ளன.

ii) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நீங்கள் சரியான விடை என தேர்வு செய்த விடையை அவ்விடைக் குறியீட்டுடன் முழுவதுமாக எழுத வேண்டும்.

iii) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கு ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

iv) பல்வகை விடை வினாவகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலில் எழுதுதல் கூடாது. ( வரைபடங்கள், படங்கள் மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vi) பல்வகை வினா-விடை வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல் மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறினால் விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதெற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

I. கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமை பெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete Statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியானது அல்லது மிகப்பொருத்தமானது. சரியான விடையை தேர்ந்தெடுத்து, அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் குறியீட்டு எழுத்துடன் முழு விடையையும் எழுத வேண்டும் : $15 \times 1 = 15$

1. இரண்டாம் உலகப்போரின் வெற்றிக்கு காரணமானவர்களின் சரியான வரிசை எது ?

(A) சர்ச்சில், ட்ரூமேன், ஸ்டாலின், டிகாலே ( De Gaulle )

(B) ஹிட்லர், லெனின், டிகாலே, ஸ்டாலின்

(C) ட்ரூமேன், சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட்

(D) சர்ச்சில், லெனின், ஸ்டாலின், டிகாலே.

*விடை :* ____________________

2. மகல்வாரி முறையின் ( Mahalwari system ) முக்கிய சிறப்பம்சம் ................... ஆகும்.

(A) நில உடமையின் பரப்பளவை பொறுத்து வருவாய் தீர்மானிக்கப்பட்டது

(B) வருவாய் ஆனது நிலத்தின் வளத்தைப் பொறுத்து தீர்மானிக்கப்பட்டது

(C) மகல்தாரர்களும் மற்றும் விவசாயிகளும் வருவாயை செலுத்துவதில் கூட்டு பொறுப்பு ஏற்றுக் கொள்ளல்

(D) வருவாயானது நீர்பாசன வசதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.

*விடை :* ____________________

3. சோங்கலிராயன்னா ஒரு புரட்சியாளர்கள் படையை ஒன்று திரட்டி ஆங்கிலேயரை தாக்கினார். ஏனெனில்

(A) அவர் ஆங்கிலேயரை பழிவாங்க நினைத்தார்

(B) அவர் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு விரட்ட நினைத்தார்

(C) அவர் கிட்டூர் அரசராக விரும்பினார்

(D) இராணி சென்னம்மாவின் தத்துப்பிள்ளையை அரசராக ஆக்க முயற்சித்தார்.

*விடை :* ____________________

4. சுதந்திரத்திற்குப் பின் ஆன இந்திய வரலாற்றில் சர்தார் வல்லபாய் பட்டேல் அதிகம் நினைவு கூறப்படுகிறார். ஏனெனில்

(A) அவர் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்தார்

(B) இந்திய சமஸ்தானங்களை இந்திய யூனியனுடன் இணைத்தார்

(C) கோவா விடுதலையடைய உதவினார்

(D) மாநில எல்லைகளை திருத்தியமைத்தார் ( States reorganization )

*விடை :* ____________________

5. ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிக்கென ஸ்டாலினால் தரப்பட்ட மறக்க இயலாத பங்களிப்பு எது ?

(A) ஐந்தாண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது

(B) பிரபுத்துவ முறையை ஒழித்தது

(C) இராணுவ பலத்தை அதிகரித்தது

(D) புரோலிடாரியேட்களின் ( Proletariat ) சர்வாதிகாரத்தை அமைத்தது.

*விடை :* ______________________________

6. மற்ற மத மக்களின் மீதுள்ள வெறுப்பு .................. ஆகும்.

(A) வட்டாரப்பற்று ( Regionalism )

(B) சமத்துவம் ( Socialism )

(C) முற்போக்குதத்துவம் ( Liberalism )

(D) வகுப்பு வாதம் ( Communalism ).

*விடை :* ______________________________

7. இந்தியாவின் ஜாவா ( Java ) எனப்படுவது

(A) மும்பை

(B) இராணிகன்ஜ்

(C) கோரக்பூர்

(D) சோட்டாநாக்பூர்.

*விடை :* ______________________________

8. கொத்தடிமை முறை எந்த ஆண்டு ஒழிக்கப்பட்டது ?

(A) கி.பி. 1972

(B) கி.பி. 1976

(C) கி.பி.1978

(D) கி.பி. 1982.

*விடை :* ____________________

9. வீட்டிலிருந்தே இயங்கும் தொழிற்சாலைகளின் ( Household industries ) மற்றொரு பெயர்

(A) குடிசைத் தொழில்கள் ( Cottage industries )

(B) உற்பத்தி தொழிற்சாலைகள் ( Manufacturing industries )

(C) உள்ளூர் அல்லது தல தொழிற்சாலைகள் ( Local industries )

(D) சிறு தொழில்கள் ( Small scale industries ).

*விடை :* ____________________

10. மேற்குத்தொடர்ச்சி மலைகள் எந்த விதத்தில் இந்தியாவின் தட்பவெப்ப நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன ?

(A) அடர்ந்த காடுகள் வளர உதவியாக உள்ளன

(B) மனம் கவரும் மலை வாசஸ்தலங்களை தந்துள்ளது

(C) தென்மேற்கு பருவக்காற்றுகளில் இருந்து அதிகமழையை பெற வைப்பது

(D) வன உயிரினங்களுக்கு உறைவிடம் அளிக்கிறது.

*விடை :* ____________________

11. பருவக்காற்று காடுகளின் ( Monsoon forest ) தனிப்பட்ட ஒரு பண்பு எது ?

(A) மரங்கள் எப்போதுமே பசுமையாக இருத்தல்

(B) மரங்கள், கோடைகாலத்தின் துவக்கத்தில் இலைகளை உதிர்ப்பது

(C) மரங்கள் விழுதுகளைக் ( Pendant roots ) கொண்டிருப்பது

(D) மரங்கள் குட்டையாகவும் ஆழமான வேர்களையும் கொண்டிருப்பது.

*விடை :* ________________________________

12. பெட்ரோலியம் 'திரவதங்கம்' என அழைக்கப்படுகின்றது. ஏனெனில்

(A) இது தங்கத்தைப் போல் ஜொலிக்கிறது

(B) இது அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுகிறது

(C) இது தங்கத்தை விட மதிப்புமிக்கது

(D) இது எளிதில் தீப்பிடிக்கக் கூடியது.

*விடை :* ________________________________

13. தற்போதைய இந்திய அரசியலமைப்பை வடிவமைக்க உதவிய மிக முக்கிய ஆவணம் .................... ஆகும்.

(A) ஒழுங்குமுறைச் சட்டம்

(B) பிட்ஸ் இந்திய சட்டம்

(C) மிண்டோ-மார்லி சீர்திருத்தம்

(D) இந்திய அரசுச்சட்டம், 1935.

*விடை :* ________________________________

14. 'லோக் ஆயுக்தா' அமைப்பதின் முக்கிய நோக்கம் யாது ?

    (A) ஊழலை எதிர்த்து போராட

    (B) கள்ளக்கடத்தலை தடுக்க

    (C) வரதட்சணையை கட்டுப்படுத்த

    (D) வறுமையை ஒழிக்க.

*விடை :* ______________________________

15. உயிரி ஆயுதங்களின் மாநாடு 1975 ( Biological Weapons Convention of 1975 ) இன் நோக்கம் என்ன ?

    (A) விண்வெளி மற்றும் கடலுக்கடியில் அணு ஆயுதச் சோதனைகளை தடுக்க

    (B) விண்வெளியில் இராணுவ நடவடிக்கைகளை தடை செய்ய

    (C) அணு ஆயுதங்களை பிற நாடுகளுக்கு தருவதை தடை செய்ய

    (D) உயிரி ஆயுதங்களை தயாரித்தலையும் மற்றும் அவற்றை சேமித்து வைத்தலையும் தடை செய்ய.

*விடை :* ______________________________

II. கோடிட்ட இடங்களை பொருத்தமான விடைகளைக் கொண்டு நிரப்புக : 5 × 1 = 5

16. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி ................................................ நிறுவப்பட்டது.

17. பழங்கால மெஸபடோமியா என்பது தற்போதைய ................................................ ஆகும்.

18. கிராமப்புற பெண்களின் வளர்ச்சிக்கென தொடங்கப்பட்டுள்ள திட்டம் ................................................ ஆகும்.

19. கர்நாடகாவில் அதிக மழைப் பொழிவை பெறும் பிரதேசம் ................................................ ஆகும்.

20. நியாய விலைக்கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்களை அளிப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்பு ................................................ ஆகும்.

III. 21. **பட்டியல்-அ** வில் உள்ளவற்றை **பட்டியல்-ஆ** வுடன் பொருத்தி சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக : $5 \times 1 = 5$

| **பட்டியல் - அ** | **பட்டியல் - ஆ** |
|---|---|
| (a) ஆர்ய சமாஜம் | (i) இராஜாராம் மோகன் ராய் |
| (b) இந்திய கவுன்சில் சட்டம் | (ii) தாராபாய் ஷிண்டே |
| (c) பிரம்ம சமாஜம் | (iii) மிண்டோ-மார்லி |
| (d) ஸ்திரி புருஷ துலான ( Stri Purusha Tulana ) | (iv) சாதி அடிப்படையிலான வாக்காளர்கள் ( Communal electorate ) |
| (e) முதல் கவர்னர் ஜெனரல் | (v) தயானந்த சரஸ்வதி |
| | (vi) Dr. B. R. அம்பேத்கார் |
| | (vii) வாரன் ஹேஸ்டிங்ஸ் |
| | (viii) போட்டித் தேர்வுகள். |

*விடைகள் :*

(a) ____________________

(b) ____________________

(c) ____________________

(d) ____________________

(e) ____________________

IV. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ***ஒரு*** வரியில் விடையளிக்க : 9 × 1 = 9

22. பிராங்ளின் D. ரூஸ்வெல்ட் ஏன் 'புதிய ஒப்பந்தத்தை' ( New deal ) அறிமுகப்படுத்தினார் ?

23. பஞ்சாபின் சிங்கம் என அழைக்கப்படுபவர் யார் ?

24. ஐ.நா. அமைப்பின் ( UNO ) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது ?

25. ஐ.நா. அமைப்பு மனித உரிமைகளைப் பற்றிய பிரகடனத்தை எப்போது வெளியிட்டது ?

26. 'மெய்ன் கேம்ப்' ( Mein Kampf ) என்ற புத்தகத்தை எழுதியவர் யார் ?

27. இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் இன்றளவும் இருக்கக்கூடிய செய்தித்தாள் எது ?

28. 'பசுமைப் புரட்சி' ( Green revolution ) என்றால் என்ன ?

29. இந்தியாவின் 'தேசியப்பறவை' எது?

30. சமீப காலமாக சார்க் ( SAARC ) அமைப்பில் பின்னடைவு ஏற்படக் காரணம் என்ன ?

V. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரு வரிகளில் விடையளிக்க : $16 \times 2 = 32$

31. மூன்றாவது ஆங்கிலோ-மைசூர் போருக்குப் பின் திப்புவின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறு ?

32. இசூரின் ( Isur ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் வேறுபட்டது. எவ்வாறு ?

33. அகதிகளின் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

34. சேஷாத்திரி ஐயரின் சாதனைகள் யாவை ?

35. இரண்டாம் வளைகுடாப் போருக்கு ( Second Gulf War ) காரணம் என்ன ? அதன் விளைவு யாது ?

36. ஆங்கிலக் கல்வி இந்தியர்களிடையே தேசியத்தை வளர்க்க உதவியது. எவ்வாறு ?

37. வரதட்சணை ( Dowry ) என்றால் என்ன ? வரதட்சணை தடுப்பு சட்டம் எப்போது இயற்றப்பட்டது ?

38. ஐரோப்பிய சமுதாயம் ( **European community** ) என்றால் என்ன ? அதன் குறிப்பிடத்தகுந்த சாதனைகள் யாவை ?

39. சீனா இந்தியாவின் மீது தாக்குதல் நடத்திய பிறகும் கூட இந்தியா சீனாவுடன் நட்புடன் இருக்க விரும்பியதை வெளிப்படுத்தியது என்று நீவிர் எங்ஙனம் கூற இயலும் ?

40. கிழக்கு கடற்கரைக்கும், மேற்கு கடற்கரைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

41. இந்தியா எந்த தாதுப்பொருளின் உற்பத்தியின் மீது முற்றுரிமை ( Monopoly ) பெற்றுள்ளது ? அந்த தாதுப்பொருளின் பயன்கள் யாவை ?

42. சிமெண்ட் பயன்பாட்டின் அளவு ஒரு நாட்டின் வளர்ச்சியின் குறியீடாகும். எவ்வாறு ?

43. உள்ளூர் நீர்வழிப் போக்குவரத்து ( Inland water ways ) தற்போது அதன் முக்கியத்துவத்தை ஏன் இழந்து வருகிறது ?

44. பன்னாட்டு கழகம் ( League of Nations ) அதன் கடமையை செய்ய தவறியது ஏன் ?

45. தொழிற்சாலைகள் எங்ஙனம் விவசாயத்தின் வளர்ச்சிக்கு காரணமாக உள்ளன ?

46. நான்காம் ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத் துறையில் தோல்வி ஏற்படக் காரணங்கள் யாவை ?

VI. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ***ஆறு*** வரிகளில் விடையளிக்க : 6 × 3 = 18

47. மண் அரிப்பை தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை ?

48. கலப்பு பண்ணை விவசாயம் ( Mixed farming ) என்றால் என்ன ? அதன் முக்கிய இயல்புகள் யாவை ?

49. குழந்தைகளை ஆரம்பப்பள்ளிக்கு வரச் செய்வதை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

50. போர்த்துகீசியர்களின் வீழ்ச்சிக்கு காரணங்கள் யாவை ?

51. 1857 ம் ஆண்டு புரட்சி தோல்வியடைந்ததற்கான காரணங்களை தருக.

52. ஐந்தாண்டு திட்டங்களின் துவக்க காலத்திலிருந்தே இந்தியா மோசமான செலுத்து சமநிலையை ( Balance of Payments ) எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏன் ?

VII. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் எட்டு வரிகளில் விடையளிக்க : $3 \times 4 = 12$

53. இந்திய தேசிய இயக்கத்தில் சுபாஷ் சந்திர போஸின் பங்கினை விவரி.

54. இந்தியா-பாகிஸ்தான் உறவு இணக்கமான முறையில் இல்லை என நீவிர் எங்ஙனம் கூறுவீர்கள் ?

55. இந்திய விவசாயத்தை மேம்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

VIII. 56. இந்தியாவின் நிலவரைபடத்தை வரைந்து அதில் கீழ்வருவனவற்றை குறிப்பிடுக : 1 + 3 = 4

a) மும்பை

b) $82\frac{1}{2}^{\circ}$ E தீர்க்க ரேகை

c) காவிரி ஆறு.

<u>கண்பார்வையற்ற மாணவர்கட்கான மாற்று வினா :</u> ( வினா எண். 56 க்கு பதிலாக )

இந்திய மக்களின் வாழ்க்கைக்கு இமயமலையின் பயன்கள் யாவை ? 4